Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month










Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,


# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்:8 இதழ்:12 டிசம்பர் 2022 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL: 8 ISSUE NO : 12 December 2022 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-

**இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்.**

மத்தேயு 1:23





# மருத்துவ சிகிச்சையால் குணமாக்க முடியாத தீராத வியாதிகளை சுகப்படுத்திய அன்பர் இயேசு!

நாங்கள் சிங்கப்பூர் தேசத்தில் வாழ்ந்து வருகின்றோம். கர்த்தருக்கு பயந்து, அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு அவருக்கு சாட்சியாக வாழ்கிறோம்.

எங்களுடைய மூத்த மகன் பெயர் ஜெரோம் ஜோஷ்வா. அவனுடைய வலது கண்ணில் ஒவ்வாமை உண்டாகி கண்ணில் பிரச்சனை ஏற்பட்டது. அவன் அழுதால் கூட கண்ணீர் வராது. நான்கு வயதாக இருக்கும் பொழுது அடிக்கடி தன்னை அறியாமல் கீழே விழுந்து விடுவான். காதில் பிரச்சனை, அவன் பேசுவது தெளிவாக இருக்காது. மூளை வளர்ச்சி மிகக் குறைவாக இருந்தது. முடிவில் அவனுக்கு ஆட்டிசம் என மருத்துவர்கள் கண்டு பிடித்தனர்.

இதனிமித்தம் அவனுக்கு பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப்பட்டும் எந்த முன்னேற்றமும் இல்லை. கர்த்தர் தந்த மூத்த மகன் இவ்வாறு வேதனைப்படுவதை கண்டு மிகவும் கலங்கினோம், கண்ணீர் வடித்தோம். அநேக சமயம் **Hyper Active** ஆகவே இருப்பான்.

இந்த நிலையில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் நடத்திய கூட்டத்திற்கு மூத்த மகனை அழைத்து வந்தோம். சகோதரர் மிகவும் அன்போடு எங்களை விசாரித்தார். என் மகனை அருகில் வரவழைத்து மிகுந்த அன்போடு பேசினார். **பிறகு இயேசுவின் நாமத்தில் அவனுக்குள்ளிருந்த, மருத்துவர்களால் குணமாக்கமுடியாத ஏழு வியாதிகளையும் இயேசுவின் நாமத்தில் அவனை விட்டுபோகும்படி கட்டளையிட்டார். சகோதரர் ஜெபித்த அந்த நிமிடத்திலேயே என் மகனிடத்தில் பெரிய ஒரு மாற்றம் காணப்பட்டது. ஆட்டிசம் வியாதி நீங்கியது. நன்றாக பேசினான், நடந்தான். எல்லாவற்றையும் சுலபமாக புரிந்து கொண்டான்.** ஆட்டிசத்திற்குரிய மருந்துகள் தேவை யில்லாமல் போனது.

**இன்றைக்கு மகன் நன்கு படித்து பெரிய ஒரு கம்பெனியில் வேலை செய்கின்றான். கர்த்தருக்கு பயந்து நடக்கின்றான், இசையிலும் மிக ஆர்வமாக இருக்கின்றான், தேவனை ஆராதிக்கின்றான். இது மிகப் பெரிய அதிசயமாக கருதுகிறோம்.**

**சகோதரர் ஜெபித்த உடனே இயேசு தொட்டு செயலாற்றியதை அன்றைக்கு தான் கண்கூடாய் பார்த்தோம். இப்பொழுது மூத்த மகனை குறித்து கவலையில்லாமல் இருக்கிறோம். பரிபூரண சுகத்தைக் கொடுத்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறோம். சகோதரர் அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறோம்.**

Ms. Kathy Aaron



## Rev. Dr. A. ஜாஷ்வா அவர்கள் ஜெபத்தினால் மகத்துவ தேவன் செய்த மகத்தான அற்புதங்கள் தேவநாமம் மகிமைக்காக!

### அறுவை சிகிச்சையின்றி சுகம் தந்த கர்த்தர்



என்னுடைய தங்கைக்கு சிறுகுடலில் மிகப்பெரிய பாதிப்பு இருப்பதாகவும், அறுவை சிகிச்சை செய்யவேண்டும் எனவும் மருத்துவர்கள் கூறினார்கள். மேலும் அதற்குரிய **Advance Test** எடுப்பதற்காக பெரிய மருத்துவமனைக்கு என் தங்கையை அனுப்பி வைத்தார்கள். இதனால் நாங்கள் அனைவரும் மிகுந்த வேதனையுடன் இருந்தோம். உடனே நாங்கள் Rev.Dr.A. ஜாஷ்வா அவர்களை தொலைபேசி வாயிலாக தொடர்புக்கொண்டு என் தங்கைக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டோம்.

**பாஸ்டர் அவர்கள் என் தங்கைக்காக ஊக்கமாய் ஜெபித்தார்கள். கர்த்தர் தாமே அவர்கள் ஜெபத்தைக் கேட்டு, என் தங்கைக்கு எடுக்கப்பட்ட அனைத்து பரிசோதனைகள் முடிவும் நார்மல் என வருவதற்கு உதவி செய்தார். அறுவை சிகிச்சை தேவையில்லை என மருத்துவர்கள் கூறிவிட்டார்கள். எங்கள் துக்கத்தை மாற்றி அற்புதம் செய்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறோம். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக!**

- சகோதரி சாந்தகுமாரி, திருநெல்வேலி.

### அற்புத சுகம் தந்த இயேசு!



என் பெயர் அரியப்பழம். இரண்டு வருடமாக கைவலியினால் அதிகம் கஷ்டப்பட்டேன். கடந்த முறை பாளையங்கோட்டை செல்வி மஹாலில் நடைப்பெற்ற கூட்டத்திற்கு வரும்பொழுது என்னால் கையை தூக்க முடியவில்லை. அதிக வலி, வேதனையுடன்தான் கூட்டத்திற்கு வந்தேன். **ஜெபவேளையில் பாஸ்டர் ஜாஷ்வா அவர்கள் நோயாளிகளுக்காக ஜெபித்தபொழுது தேவன் எனக்கு அற்புத சுகத்தை தந்தார். இப்பொழுது என் கையை என்னால் நன்றாக தூக்க முடிகிறது. சுகம் கொடுத்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்.**

- சகோதரி அரியப்பழம், திருநெல்வேலி.

### அதிசயமான வெற்றியை தந்த கர்த்தர்!



என் மகன் படிப்பில் மந்தமான நிலையில் இருந்தான். அவன் ITI படித்துக் கொண்டிருந்தப்பொழுது, என் மகன் தேர்வில் வெற்றி பெறுவது கடினம் என ஆசிரியர்கள் சொல்லிவிட்டார்கள். அப்பொழுது பாஸ்டர் ஜாஷ்வா அவர்களிடம் என் மகனுடைய நிலையைச் சொல்லி மகனுக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டேன்.

பாஸ்டரும் மகனுக்காக ஜெபித்தார்கள். **மகனுடைய ITI தேர்வு முடிந்து ரிசல்ட் வெளிவந்தது. மகனுடன் சேர்ந்து 17 பேர் தேர்வு எழுதினார்கள். அதில் எங்கள் மகன் ஒருவன் மட்டுமே தேர்வில் வெற்றி பெற்றுள்ளான் என அறிந்தோம். ஆச்சரியமான வெற்றியைத் தந்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறோம். என் மகனுக்காக பாரத்துடன் ஜெபித்த பாஸ்டர் அவர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம்.**

- திருமதி. ரெஜினா, பிராஞ்சேரி (கயத்தார்)



# அன்பரின் ஊழியம்

மலர்:8 ◆ டிசம்பர் 2022 ◆ இதழ் 12

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

நம் ஆண்டவரும் உலகத்தின் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்களை அன்போடு வாழ்த்துகிறேன்.

2022-ம் ஆண்டு முடிவிற்குள் பிரவேசித்துக் கொண்டிருக்கும் உங்கள் ஒவ்வொருவரையும் தேவனாகிய கர்த்தர் ஆசீர்வதித்து தமது கிருபையில் பெருகச் செய்வாராக!

கிறிஸ்துமஸ் தினத்தை ஆசரிக்கும் இந்த மாதத்தில் இயேசுகிறிஸ்துவின் பிறப்பினால் நமக்கு உண்டான கிருபையை நினைத்து தேவனை ஸ்தோத்தரிப்போம்.

- **அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரேபேறான வருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.**
- **அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபை பெற்றோம்.**
- **எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின. யோவான் 1:14,16,17**

மேற்கண்ட வசனங்களில் நாம் பார்க்கிறபடி கிருபையும் சத்தியமும் அவர் மூலமாய் நமக்கு பரிபூரணமாய் கொடுக்கப்பட்டது. அந்த கிருபை அதிகம் அதிகமாய் உங்களுக்குள் பெருகி, இன்னும் பலன் கொடுக்க ஊக்கமாய் ஜெபிக்கிறேன்.

கடந்த வருஷங்களெல்லாம் இந்த கிருபை நம்மை தாங்கி வந்ததற்காக தேவனை மனதார ஸ்தோத்தரிப்போம்.

அதே சமயத்தில் இந்த கிருபையின் காலம் முடிவதற்குள் நம்மால் இயன்ற அளவிற்கு ஆத்துமாக் களை ஆண்டவருக்காக சேர்த்துக் கொள்வோம். இந்த கிருபையின் காலங்கள் விரைவில் முடிவுக்கு வருவதை நாம் பார்க்க முடியும். உலகத்தில் நாம் பார்க்கிற கேட்கிற அனைத்து காரியங்களும் தலை கீழாக புரட்டிப் போடப்படும் காலங்கள் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

கர்த்தருடைய வருகை சமீபமாயிருக்கிறது. எனவே விழித்திருங்கள்! ஆயத்தப்படுத்துங்கள்!.

உங்களில் அநேகர் பல வருடங்களுக்கு முன்பு பங்காளராக சேர்ந்தவர்களாயிருப்பீர்கள். **தற்பொழுது உங்கள் விலாசம், தொலைபேசி எண் மாறியிருக்க லாம். அப்படி மாறியிருந்தால் உடனே கடிதம் மூலமாகவும், இ.மெயில் மூலமாகவும், வாட்ஸ் அப் மூலமாகவும் மறவாமல் எங்களுக்கு தெரியப் படுத்துங்கள்.**

S.J.Saves Trust க்காகவும் ஜெபியுங்கள். ஏழையாக பிறந்த நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவை

ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

| சந்தா விபரம் | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |

24 மணி நேர ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 94888 45627
காலை 9.30 மணி முதல் இரவு 7.00 மணிவரை ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்: 80987 42638
Telugu & Hindi : 99445 36343, Malayalam : 94889 32937, Kannada : 90031 17205
e-mail: info@mojindia.org website: www.ministryofjesus.in
முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

நினைவுகூர்ந்து **இந்த மாதத்தில் S.J.Saves Trust-ல் உள்ள ஏழைப்பிள்ளைகளுக்கு புத்தாடைகள் வாங்கிக் கொடுத்து அவர்களை சந்தோஷப்படுத்த தாராளமாய் உதவி செய்யுங்கள்.**

தொடர்ந்து வருகின்ற வருஷத்திலும் அன்பரின் ஊழியத்திற்காக பாரத்துடன் ஜெபியுங்கள். **அன்பரின் ஊழியத்தின் மூலம் நடைபெற்று வருகிற சுவிசேஷ கூட்டங்களுக்கு உங்கள் குடும்பத்தின் சார்பாக ஸ்பான்சர் செய்து தாங்குங்கள்.**

## இம்மாத வாக்குத்தத்தம்

**லூக்கா 1:37**
**தானியேல் 9:23**
**சங்கீதம் 97:11**
**ஏசாயா 44:21**

எங்கள் அப்பா, அம்மா இருவரின் நல்ல சுகத்திற்காகவும், எங்கள் குடும்பத்திற்காகவும் ஊக்கமாய் ஜெபியுங்கள்.

**டிசம்பர் மாதம் மட்டும்** திருச்சியில் குடும்ப ஆசீர்வாதக் கூட்டம் 31.12.2022 அன்று **நடைபெறாது.**

அதற்கு பதில் **ஜனவரி 1-ம் தேதி புத்தாண்டு ஆசீர்வாத தீர்க்கதரிசன ஜெபம் திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் நடைபெறும்.** மாலை 4 மணிக்கு துவங்கி இரவு 7 மணியளவில் முடிவடையும். குடும்பமாக வாருங்கள்.

டிசம்பர் 31-ம் தேதி சனிக்கிழமை அன்று இரவு புது வருட வாக்குத்தத்த ஆராதனை மட்டும் நடைபெறும்.

**தொடர்ந்து 2 நாட்கள் அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் தங்கி கூட்டங்களில் பங்கு பெற விரும்புகிற பங்காளர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள். நீங்கள் தங்குவதற்குரிய இடத்தை நாங்கள் ஆயத்தம் செய்வதற்கு உதவியாக இருக்கும். தொலைபேசி எண்கள்: 9488845627, 8098742638**

தினந்தோறும் **Ministry of Jesus Youtube** வாயிலாக அதிகாலை 5.00 மணிக்கு ஒளிப்பரப்பாகிற அனுதின அற்புதம் நிகழ்ச்சியை தொடர்ந்து பாருங்கள். share செய்யுங்கள்.

**பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். ஏசாயா 11:9**

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**

## *இதயம் தொட்ட எண்ணம்*

**The birth of Jesus is the single most dramatic event that changed the history of mankind.**

**இந்த மனுக்குலத்தின் சரித்திரத்தையே மாற்றியமைத்த ஒரே வியத்தகு சம்பவம் இயேசுவின் பிறப்பே!**



**ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்**

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. | Account No. | Account No. |
| 10848469699 | 10848559426 | 10848474869 |

**State Bank of India, Cantonment, Trichy Main Branch**
**IFS Code : SBIN 0000930**

**மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 95004 87061 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.**

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code - ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது Cell No : 95004 87061 என்ற எண் மூலமும் அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.

## எமது You Tube சேனல்களை Subscribe செய்யவும்


Ministry of Jesus - Dr. Ananda Stira


Dr Jane Joshua

My Deliverance Church

## எமது முகநூல் பக்கங்கள் (Face book)

Ministry of Jesus (Anbarin Oozhiyam) @ministryofjesus.in

Ananda Stira @dranandastira

Margretstira

Jane Joshua @DrJaneJoshua

My Deliverance Church @mydeliverance.church

Rev.Dr.A. Joshua @RevDrAJoshua

Ministry of Jesus
dr. janejosh
jonathanmosesrajstira

ministryofjesus.in

drjane15

## கன்னியாகுமரி மற்றும் சென்னை பகுதியிலுள்ள அன்பரின் ஊழியப் பங்காளர்கள் கவனத்திற்கு

நமது அன்பரின் ஊழியப் பிரதிநிதிகளாக கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் எனவே உங்கள் ஜெப வேண்டுதல்களை அவர்களிடம் கூறி ஜெபித்துக் கொள்ளலாம். மேலும், நமது ஊழிய விபரங்களையும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

கன்னியாகுமரி : 82203 17472
சென்னை : 77081 53666



# இம்மானுவேல்
## (God with us)

கிறிஸ்துமஸ் சிறப்புச் செய்தி : Rev.Dr.A. ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் எனக்கு அன்பான, அன்பரின் ஊழிய வாசகர்களே மற்றும் பங்காளர்களே, பெத்லகேம் பாலகனாம் இயேசுவின் நாமத்தில் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

இந்த வருடத்தின் கடைசி மாதத்திற்குள் கடந்து வந்திருக்கிறோம். சென்ற மாதங்கள் முழுவதும் நம்மை பத்திரமாய் பாதுகாத்த தேவன் தாமே இம்மாதமும் நம்மோடிருந்து நம்மை வழிநடத்தி ஆசீர்வதிப்பாராக!

டிசம்பர் மாதம் என்றாலே நம் அனைவருடைய மனதிற்குள் வருவது இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் பண்டிகை. 2022 ஆண்டு களுக்கு முன்பாக பாலகனாய் அவதரித்த இயேசு பிரான் பிறந்த நாளை ஆசரிப்பதுதான் கிறிஸ்துமஸ். எனவே இம்மாதத்தில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் செய்தியை உங்களோடு பகிர்ந்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இயேசுகிறிஸ்து பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த தீர்க்கதரிசி யாகிய ஏசாயா உரைத்த தீர்க்கதரிசனம் **இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள். ஏசாயா 7:14.** இந்த தீர்க்கதரிசனம் பல நூறு ஆண்டுகளுக்கு பின்பு நிறைவேறியதை மத்தேயு சுவிசேஷத்தில் வாசிக்கிறோம். **இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். மத்தேயு 1:23.** பிறக்கப்போகிற குழந்தைக்கு இம்மானுவேல் என பெயரிடும்படி சொல்லப் பட்டது. **இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்.** இந்த இம்மானுவேல்தான் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. அவர் எப்பொழுதும் நம்மோடுகூட இருக்கும் தெய்வம். இந்த இம்மானுவேலைக் குறித்துதான் இச்செய்தியில் நாம் தியானிக்க இருக்கிறோம்.

இம்மானுவேலராகிய நம் தேவன் எப்பொழுதெல்லாம் அவர் நம்மோடுகூட இருப்பார் என்பதைப் பற்றி வேதத்தின் அடிப்படையில் உங்களோடுகூட சில குறிப்பு களை பகிர்ந்துக் கொள்ள இருக்கிறேன்.

### 1. நாம் கர்த்தரை தேடும்போது அவர் நம்மோடு இருப்பார்!

**நீங்கள் அவரைத் தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார். 2 நாளாகமம் 15:2**

கர்த்தரை தேடுவது என்பது அவருடைய பிரசன்னத்தையும் அவருடைய ஆசீர்வாதத் தையும், அவருடைய குணாதிசயங்களையும் நாம் நாடுவதாகும். **கர்த்தரையும் அவர் வல்லமை யையும் நாடுங்கள். அவர் சமுகத்தை நித்தமும் தேடுங்கள். சங்.105:4.** நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இல்லாத ஒரு வாழ்க்கை அது வெறுமையான வாழ்க்கை ஆகும். இம்மானு வேலராகிய தேவன் நம்மோடுகூட வாசம் பண்ணும்படியாக, தங்கும்படியாக விரும்புகிறார். ஆனால் நீங்கள் அவரை தேடினால்தான் அவர் உங்களுக்கு வெளிப்படுவார். நீங்கள் அவரை

தேடும்பொழுதுதான் அவர் தம்முடைய குணாதிசயங்களை, ஆசீர்வாதங் களை உங்கள் மேல் பொழிந்தருள்வார். இது என்றோ ஒரு நாளில் நடக்கும் நிகழ்வல்ல. இது ஒவ்வொரு நாளும் நம் வாழ்க்கையில் நடக்கும் அவசியமான ஒன்று. ஆகவேதான் சங்கீதக்காரன் சொல்லிருக்கிறார். அவர் சமூகத்தை நித்தமும் தேடுங்கள். இது எதைக்குறிக்கிறது என்றால் தேவனோடு நாம் நேரத்தை செலவிடுவதற்காக ஆயத்தப்படுவதைக் குறிக்கிறது. **அவரை முழு இருதயத்தோடும் தேடுகிறவர்கள் பாக்கியவான்கள். சங்.119:2**

எப்படியெல்லாம் நாம் தேவனோடு நேரத்தை செலவழிக்க முடியும்?

1. வேதம் வாசிப்பதன் மூலம்
2. ஜெபத்தின் மூலம் அல்லது தேவனோடு பேசுவதின் மூலம்
3. சக விசுவாசிகளோடு ஐக்கியப்படுவதின் மூலம்

மேற்சொல்லப்பட்ட இந்த 3 அடிப்படையான முறைகளின் மூலம் நாம் தேவனோடு நேரத்தை செலவழிக்கும்போது நம் இருதயம் மகிழும். அது மட்டுமல்ல. எந்த ஒரு நன்மையும் குறைவுபடாதபடி அவர் நம்மை வழிநடத்துவார். காரணம் இம்மானுவேலராகிய தேவன் உங்களோடுகூட இருக்கும்பொழுது உங்கள் வாழ்வில் குறைகள் எதுவும் இருக்காது. அதே நேரத்தில் உங்கள் இருதயம் மகிழ்ந்து களிகூறும். எனவே தேவனை தேடுவதில் முந்திக் கொள்ளுங்கள். அப்பொழுது அவர் உங்களோடிருந்து ஆசீர்வதிப்பார். **கர்த்தரைத் தேடுகிறவர்களின் இருதயம் மகிழ்வதாக. (சங்.105:3) கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங்குறைவுபடாது. சங்.34:10**

## 2. அவர் காட்டும் வழியில் நடக்கும்போது அவர் நம்மோடு இருப்பார்!

- **நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்... சங்.32:8**
- **உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன். உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக. சங்.143:10**
- **கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ அவனுக்குத் தாம் தெரிந்துகொள்ளும் வழியைப் போதிப்பார். சங்.25:12**

மேற்கூறப்பட்ட வசனங்களின்படி அவர் காட்டும் பாதையில் நடப்பதற்கு நாம் அழைக்கப் பட்டிருக்கிறோம். கர்த்தருடைய வழிகள் பரிசுத்தமானவைகள், நீதியானவைகள், செம்மையானவைகள், நியாயமானவைகள். ஆனால் மனுஷருக்கு செம்மையாய் தோன்றுகிற வழிகளுமுண்டு. அதனுடைய முடிவு அழிவு என வேதத்தில் வாசிக்கிறோம். **கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள், நீதிமான்கள் அவைகளில் நடப்பார்கள். ஓசியா 14:9**

கர்த்தருடைய வழியில் நாம் நடக்கும் போது அந்த வழியில் இடறல் இல்லை. அழிவு இல்லை. ஆசீர்வாதம்தான். இன்றைக்கு உலகத்தில் வழிகாட்டுவதற்கு எத்தனையோ புத்தகங்கள் இருக்கின்றன. எத்தனையோ மனிதர்கள் இருக்கின்றனர். ஆனால் **நானே வழி என்று சொன்னவர் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து மாத்திரமே. அவர் காட்டும் வழியில் நீங்கள் செல்லும்போது நிச்சயமாக அவர் உங்களோடு கூட இருப்பார்.**

எதிலெல்லாம் வழி காட்டுவார்? உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில், உங்கள் குடும்ப வாழ்க்கையில்,உங்கள் வேலை, வியாபாரம், படிப்பு, கர்த்தருக்காக செய்கிற ஊழியம் ஆகியவற்றில் அவர் உங்களோடிருந்து வழிகாட்டுவார்.

எப்படி எல்லாம் வழிகாட்டுவார்? அவருடைய வார்த்தையின் மூலமாக வழிகாட்டுவார்.அவருடைய சத்தத்தின் மூலமாக வழிகாட்டுவார். சொப்பனத்தின் மூலமாக வழிகாட்டுவார். தரிசனத்தின் மூலமாக மற்றும் சூழ்நிலைகள் மூலமாகக்கூட வழிகாட்டுவார். அவருடைய வழிகாட்டுதலை சில சமயங்களில் நாம் புரிந்துக்கொள்வது கடினமானதுதான்.

ஆனால் அவரை தேடுகிற பிள்ளைகள் அவருடைய வழிகாட்டுதலை எளிதாக புரிந்துக் கொள்வார்கள்.

**பிரியமானவர்களே கர்த்தருடைய வழியிலே நடப்பதற்கு இன்றே அர்ப்பணியுங்கள். அப்பொழுது இம்மானுவேலராகிய தேவன் உங்கள்கூட இருப்பார். கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள். ...அவருடைய வழிகளில் நடக்கிறார்கள். சங்.119:1,3**

## 3. நம்முடைய வாழ்வின் இறுதி மூச்சு வரை அவர் நம்மோடிருப்பார்!

இன்றைய காலகட்டத்தில் ஒரு மனிதன் நல்ல சுகத்துடன் திடகாத்திரமாக இருக்கும் பொழுதும், குறைவுகளே இல்லாமல் பொருளாதாரத்தில் நிறைவுள்ளவனாக இருக்கும் பொழுதும் அவனைச் சுற்றி, அவனுக்கு உதவி செய்ய அநேகர் பேர் இருப்பார்கள். அவனுக்கு பணிவிடை செய்ய போட்டியிட்டுக்கொண்டு வருவார்கள். அதே மனிதன் சற்று முதுமையடைந்து, பெலன் குறைந்து, பலவிதங்களில் நெருக்கப்பட்டு, தனக்கு யாராவது உதவி செய்வார்களா என ஏங்கிக் கொண்டிருக்கும் பொழுது ஒருவரும் துணைக்கு வரமாட்டார்கள். இளவயதில் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தப்பொழுது உதவி செய்தவர்களை முதுமையான வயதில் தேடிப்பார்த்தாலும் காணாமல் போய்விடுவார்கள்.

ஆனால் கர்த்தருடைய வார்த்தை இவ்விதமாக சொல்கிறது. **உங்கள் முதிர்வயது வரைக்கும் நான் அப்படிச் செய்வேன். நரைவயது மட்டும் நான் உங்களைத் தாங்குவேன். நான் அப்படிச் செய்துவந்தேன். இனிமேலும் நான் ஏந்துவேன். நான் சுமப்பேன், தப்புவிப்பேன். ஏசாயா 46:4**

இம்மானுவேலராகிய தெய்வம் மாத்திரமே நம் இளவயதிலும், நடுவயதிலும், முதிர்வயதிலும்கூட இருப்பவர். நம்முடைய சரீரம் பெலனாய் இருக்கும்பொழுதும், சரீரம் பெலவீனமாகி கஷ்டப்படும் போதும், துன்பப்படும்போதும் கர்த்தரே நம்மோடிருப்பார். உங்கள் வாழ்நாளில் கடைசி மூச்சு நிற்கும்வரை கர்த்தர் உங்களோடுகூட இருப்பார். உங்களை சுமக்க வேண்டிய நேரத்தில் சுமப்பார். உங்களை தாங்க வேண்டிய நேரத்தில் தாங்குவார். **ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமந்துகொண்டு போவதுபோல, நீங்கள் இவ்விடத்திற்கு வருகிற வரைக்கும், நடந்துவந்த வழிகள் எல்லாவற்றிலும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சுமந்துகொண்டு வந்ததைக் கண்டீர்களே. உபாகமம் 1:31** ஆம். ஒரு தகப்பன் உங்களை சுமப்பது போல அவர் உங்களை சுமப்பார். ஆகவே சோர்ந்து போகாதீர்கள்.

**ஒரு தேவனுடைய மனுஷன் ஒரு தரிசனத்தை கண்டார். அந்த தரிசனத்தில் அவர் பார்த்தது, மிகுந்த மணல்பாங்கான கடற்கரையில், இரண்டு ஜோடி கால் தடங்கள் காணப்பட்டது. உடனே புரிந்து கொண்டார் இது நானும் இயேசுவும் சேர்ந்து செல்லும் கால் தடங்கள் என்று. கொஞ்ச தூரம் சென்றப்பிறகு, ஒரு ஜோடி கால் தடங்களையே அவர் பார்த்து அதிர்ச்சியுற்றார். காரணம் என் தேவன் எங்கே சென்றார்? என்னை தனியே விட்டு சென்று விட்டாரோ என பயந்தார். அப்பொழுது ஆண்டவர் கூறியது, "நீ பார்க்கிற அந்த ஒரு ஜோடி கால் தடங்கள் உன்னுடையது அல்ல. அது என்னுடையது. நீ சுகவீனமாய் இருக்கும் போதும், பெலனற்று இருக்கும்போதும், மிகுந்த வேதனையில் இருக்கும்போதும், உன்னால் நடக்கவே முடியாத சமயத்தில் நான் உன்னை என் தோளில் அல்லவா சுமந்துக்கொண்டு வந்தேன்" என்றார்.**

அன்பார்ந்தவர்களே, நம்முடைய இம்மானுவேலராகிய தேவன் எவ்வளவு நல்லவர் பாருங்கள். நம் பெலவீனத்தின் மத்தியில் முதுமையின் மத்தியில் நம்மை தாங்கி, சுமந்து வருகிறார். அத்துடன் நம்முடைய இறுதி மூச்சு

வரை நம்மோடிருந்து, நம்மை பாதுகாக்கிறவரா யிருக்கிறார். **இந்தத் தேவன் என்றென்றைக்கு முள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன். மரணபரியந்தம் நம்மை நடத்துவார். சங்.48:14**

ஆம். உங்கள் சரீரத்திலிருந்து ஆவி பிரியும் நாள்வரை, இறுதி மூச்சுவரை உங்களோடிருப்பார். நான் உன்னை விட்டு விலகுவதில்லை, உன்னை கைவிடுவதில்லை என்று வாக்குரைத்த தேவன் வாக்குமாறாத தேவனாக, இம்மானுவேலராக உங்கள்கூட இருப்பார்.

## 4. உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் அவர் நம்மோடிருப்பார்

இம்மானுவேலராகிய தேவன் உங்கள் வாழ்வில் இறுதி மூச்சு வரை மாத்திரமல்ல. இந்த உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் உங்களோடிருப்பார்.

உலகத்தின் முடிவு என்று சொல்லும் பொழுது, ஆண்டுகள் பல உருண்டோடலாம். சந்ததிகள் பல வந்து போகலாம். ஆனால் அவருடைய கடைசி வருகை வரைக்கும் அல்லது இந்த பூமி அழியும் நாள் வரைக்கும் இம்மானு வேலராகிய தேவன் உங்களோடிருப்பார்.

- **ஆண்டவரே, தேவரீர் தலைமுறை தலை முறையாக எங்களுக்கு அடைக்கல மானவர். சங்.90:1**
- **...நீரோ மாறாதவராயிருக்கிறீர், உம்முடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை என்று சொல்லியிருக்கிறது.** எபி.1:12

மேற்கூறப்பட்ட வசனங்களின் அடிப்படையில் கர்த்தருக்கு பயந்து நீங்கள் வாழும்பொழுது அவர் உங்களோடும் இருப்பார். உங்கள் சந்ததிகளோடும் இருப்பார். உங்கள் சந்ததிகள் கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கும்பொழுது தலைமுறை தலைமுறையாக அவர்களோடுகூட இம்மானுவேல் இருப்பார்.

உலகத்தின் முடிவு பரியந்தம் உங்களோடு கூட இருப்பேன் என்ற இம்மானுவேல் நிச்சயமாக கர்த்தரின் இரகசிய வருகை வரைக்கும் உங்களோடுகூட இருப்பார்.

நீங்களும் உங்கள் சந்ததிகளும் அவரோடு கூட இருக்க ஆயத்தமா? இல்லையெனில் இன்றே ஆயத்தமாகுங்கள்.

என் அன்பு சகோதர, சகோதரிகளே, இம்மானுவேலராகிய நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து உங்களோடுகூட எப்பொழுதும் வாசம் பண்ண ஆவலாயிருக்கிறார். அவர் எந்நாளும் உங்களோடுகூட இருப்பதற்கு மேற்சொல்லப்பட்ட நான்கு குறிப்புகளின்படி நீங்கள் கர்த்தரை தேடுங்கள். அவர் காட்டும் வழியில் நடங்கள். அப்பொழுது இம்மானுவேல ராகிய தேவன் உங்கள் இறுதி மூச்சு வரைக்கும் மட்டுமல்ல உலகத்தின் முடிவு பரியந்தம் உங்கள் சந்ததிகளோடு இருப்பார். நீங்கள் இந்த மாதத்தில் ஆசரிக்கும் கிறிஸ்து பிறப்பின் பண்டிகையும் ஒரு அர்த்தமுள்ள வகையில் இருக்கும்.

**இந்த ஆண்டிலே நீங்களும் உங்கள் குடும்பமும் இம்மானுவேலரோடு கிறிஸ்து பிறப்பு நன்நாளை கொண்டாடுங்கள். கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் நிறைவாக ஆசீர்வதித்து காப்பாராக!**


இடம் : ஹோட்டல் ஃபார்சூன் (Hotel Fortune)
5-வது மாடி, மீட்டிங் ஹால் A/C (லிப்ட் வசதி உண்டு)
அன்சாரி தெரு, ராம்நகர், கோயம்புத்தூர்
நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை
தேவ செய்தி & ஜெபம் : Rev.Dr. A. ஜாஷ்வா
தொடர்புக்கு : 94888 45627, 80987 42638
கோயம்புத்தூரில்
ஜனவரி 26
வியாழக்கிழமை

# டிசம்பர் மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

## கிருபை

டிசம்பர் 1
கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர். (எண். 6:25)

டிசம்பர் 2
எவன்மேல் கிருபையாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் கிருபையாயிருப்பேன்; (யாத்தி. 33:19)

டிசம்பர் 3
தாம் அபிஷேகம் பண்ணின தாவீதுக்கும் அவன் சந்ததிக்கும் சதாகாலமும் கிருபை செய்கிறார். (2 சாமு. 22:51)

டிசம்பர் 4
கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது. (1 நாளா. 16:34)

டிசம்பர் 5
போஜனபதார்த்தங்களினாலல்ல, கிருபையினாலே இருதயம் ஸ்திரப்படுகிறது நல்லது; (எபி. 13:9)

டிசம்பர் 6
இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள். (ரோமர் 3:24)

டிசம்பர் 7
உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி, (சங். 103:4)

டிசம்பர் 8
கர்த்தாவே, உமது கிருபையின்படி என்னை உயிர்ப்பியும். (சங். 119:159)

டிசம்பர் 9
ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது; (சங். 63:3)

டிசம்பர் 10
நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்று கர்த்தராகிய உன் மீட்பர் சொல்லுகிறார். (ஏசாயா 54:8)

டிசம்பர் 11
தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன். (ஏசாயா 55:3)

டிசம்பர் 12
நான் தாவீது குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன். (சகரியா. 12:10)

டிசம்பர் 13
தேவதூதன் அவளை நோக்கி : மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய். (லூக்கா 1:30)

டிசம்பர் 14
தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். (லூக்கா 18:13)

டிசம்பர் 15
அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபை பெற்றோம். (யோவான் 1:16)

பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று. (ரோமர் 5:20) டிசம்பர் 16

டிசம்பர் 17 என் குமாரனே, நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு. (2 தீமோ. 2:1)

தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார். (சங். 147:11) டிசம்பர் 18

டிசம்பர் 19 என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும். (2 கொரி. 12:9)

நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே... (புலம்பல் 3:22) டிசம்பர் 20

டிசம்பர் 21 உம்முடைய அதிசயமான கிருபையை விளங்கப்பண்ணும். (சங். 17:7)

என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; (சங். 23:6) டிசம்பர் 22

டிசம்பர் 23 என் கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது. (யாத்தி. 33:17)

தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது. (யாக்கோபு 4:6) டிசம்பர் 24

டிசம்பர் 25 பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. (சங். 103:11)

கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சி கொடுத்தார்கள். அவர்களெல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது. (அப்போஸ். 4:33) டிசம்பர் 26

டிசம்பர் 27 கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள் மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது. (சங். 103:17)

ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். (எபி. 4:16) டிசம்பர் 28

டிசம்பர் 29 எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, (தீத்து 2:11)

நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருககிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார். (2 கொரி. 9:8) டிசம்பர் 30

டிசம்பர் 31 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். (ரோமர். 16:24)

# Christmas Traditions around the World
# உலகெங்குமுள்ள கிறிஸ்துமஸ் பாரம்பரியங்கள்




**சுவீடன், பின்லேண்ட், நார்வே**

இந்த நாடுகளில் கிறிஸ்துமஸ் காலங்களில் St. Lucia's Day ஐ சிறப்பிக்கிறார்கள். St. Lucia கர்த்தருக்காக வாழ்ந்து மரித்த மிக முக்கியமான இரத்த சாட்சி ஆகும். அந்த நாளில் பெண்கள் அனைவரும் கையில் candle வைத்து ஜெபிக்கிறார்கள்.



**எத்தியோப்பியா**

இந்த நாட்டில் ஆர்த்தோடக்ஸ் காலண்டர் முறையை பின்பற்றி, ஜனவரி 7-ம் தேதி அன்று கிறிஸ்துமஸ் நாளை சிறப்பிக்கிறார்கள். அந்த நாளில் மக்கள் தங்கள் தலையில் மெல்லிய ஷால்-ஐ போட்டுக்கொண்டு, கையில் மெழுகுதிரியை ஏந்திக்கொண்டு, Church-ஐ 3 முறை சுற்றி வந்து கொண்டாடுகிறார்கள்.



**கிரீஸ்**

இந்த நாட்டில் கிறிஸ்துமஸ் பண்டிகையின் போது Christmas Tree மற்றும் படகு இரண்டையும் மின் விளக்குகளால் அலங்காரம் செய்கிறார்கள். இந்த நாட்டினர் கடல் சார்ந்த தொழிலை செய்வதால் அதன் அடையாளமாக படகையும் அலங்காரம் செய்து மகிழ்கின்றனர்.



**ஐஸ்லேண்ட்**

இந்த நாட்டில் கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாட்டத்தை 13 நாள் முன்னாடியே ஆரம்பித்து சிறப்பிக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் பிள்ளைகளுக்கு பரிசுகளை வழங்கி மகிழ்கிறார்கள்.



**அர்மேனியா**

இந்த நாட்டு மக்கள் கிறிஸ்துமஸ் பண்டிகையின் ஒரு வாரத்திற்கு முன்பு இருந்தே எதுவும் சாப்பிட மாட்டார்கள். கிறிஸ்துமஸ் பண்டிகை துவங்குவதற்கு ஒரு நாள் முன்னாடி கொஞ்சம் கொஞ்சமாக சாப்பிட ஆரம்பித்து அதன்பின் கிறிஸ்துமஸ் அன்று பெரிய விருந்தை ஏற்பாடு செய்து அனைவரும் உண்டு மகிழ்வார்கள். இந்த நாட்டில் கிறிஸ்துமஸ் தாத்தா புதுவருடம் அன்றே வருவார்.


## அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்

நம்பிக்கை TELEVISION

புதன்
மதியம் 12.00 – 12.30

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00

தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

ARADANA TV
புதன், வியாழன், வெள்ளி
இரவு 7.00 – 7.30

மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

HARVEST കേരളം
சனி
இரவு 7.30 – 8.00

**Tamil Whats App No: 95004 87059**

Trichy

# WE ARE HIRING



- **Social Media Executive**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in social media platforms , Good in English & Tamil*
- **Video Editors**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Premiere Pro & After Effects*
- **Graphic Designers**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Photoshop & Illustrator*
- **Camera Man**
  **with adequate experience**
- **Correspondence**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Typing & computing skills (Tamil, English, Telugu)*
- **Drivers**
- **Cooks**
- **House Keepers**


- **Male / Female**
- **Christians Preferred**
- **Accommodation will be provided**
- **Apt Remuneration will be paid**

Apply to :

**info@mojindia.org**

# பங்காளர்களின் பக்கம்

## அன்பரின் ஊழிய பங்காளர் வாழ்வில் கர்த்தர் செய்த மாபெரும் அற்புதங்கள்!



**என் பெயர் ஸ்தனிஸ்லாஸ். எனக்கு ஒரு மகனும் இரு மகள்களும் இருக்கின்றனர். அன்பரின் ஊழியத்தில் பல ஆண்டுகளாக பங்காளராக இருப்பதில் அதிக மகிழ்ச்சியடைகின்றோம்.**

### சத்துருவின் கட்டுகளிலிருந்து விடுதலையாக்கிய கர்த்தர்!

12 வருடங்களுக்கு முன்பு எனது மகளின் திருமணப் பிரச்சனையால் எதிர் தரப்பினர் எங்கள் குடும்பத்திற்கு விரோதமாக, எங்களை அழிப்பதற்காக பில்லிசூன்யம் செய்துவிட்டார்கள். அதனால் அதிக கஷ்டப்பட்டோம். அந்த நாட்களில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்களை குறித்து கேள்விப்பட்டு அவர்களை தொடர்புகொண்டு ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். **சகோதரருடைய குடும்பத்தினரும் எங்களுக்கு விரோதமாக செய்யப்பட்ட கட்டுகள் நீங்க அதிக ஊக்கமாக ஜெபித்தார்கள்.** கர்த்தர் எங்களுக்கு கிருபையாக விடுதலையை அருளினார். அந்த நாளிலிருந்து சகோதரர் நாகர்கோவில் வரும்பொழுதெல்லாம் அவர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ள ஆரம்பித்தோம்.

### நோயின் கட்டுகளிலிருந்தும் விடுவித்து வரும் கர்த்தர்

என் மனைவிக்கு கேன்ஸர் நோய் வந்து மிகவும் துன்பப்பட்டார்கள். 15 முறை ரேடியேஷன் கொடுக்கப்பட்டது. 25 முறை ஹீமோதெரபி செய்தார்கள். அப்பொழுது சகோதரர் அவர்களிடம் எனது மனைவிக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். சகோதரர் ஜெபித்து **"கெட்டுப் போன பழத்தை பிடுங்கி எறிவது போல கர்த்தர் இந்த கேன்ஸர் கட்டியை எடுத்துப் போடுவார், தலையில் உள்ள ஒரு முடி கூட உதிராது கர்த்தர் பூரண சுகத்தை தருவார்"** என்று கூறினார்கள். தொடர்ந்து சிகிச்சை மேற்கொண்டோம். அந்த மருத்துவமனைக்கு பல பேர் வந்தார்கள். அதில் சிறு பிள்ளைகள் முதல் பெரியவர்கள் வரை, தலை முடி கொட்டிய நிலையில் விக் வைத்துக்கொண்டே வந்தார்கள். அதை நான் நேரடியாக பார்த்து இருக்கிறேன்.

ஆனால் **தொடர்ந்து சிகிச்சை எடுத்த நிலையிலும் என் மனைவியின் தலையிலுள்ள முடி கொட்டாதப்படி கர்த்தர் உதவி செய்தார். சகோதரர் எனது மனைவிக்கு சொன்ன தீர்க்கதரிசனத்தின்படியே தலைமுடி கொட்டவில்லை. கர்த்தர் அற்புதமாக எனது மனைவிக்கு சுகம் தந்து இம்மட்டும் பாதுகாத்து வருகிறார்.**

மேலும் ஒரு சில வருடங்களுக்கு முன்னால் திடீரென்று ஒரு நாள் எனது இடது பக்கம் முகம் கோணி பக்கவாதம் போல வந்துவிட்டது. சகோதரர் அவர்களிடம் இதுபற்றி கூறி ஜெபித்த பிறகு கர்த்தர் அந்த பக்கவாதத்திலிருந்து பூரண சுகத்தை தந்தார். எனது முகம் சரியாகிவிட்டது.

சமீபத்தில் இரவு சாப்பிட்டுவிட்டு படுத்தேன். காலை எழுந்தபொழுது என்னுடைய வலது கண் முற்றிலும் பார்வை இழந்துவிட்டது. இதனால் நான் மிகவும் மனம் சோர்ந்து போனேன். எனக்கு ஏற்கனவே காட்ரேக்ட் (cataract) அறுவை சிகிச்சை செய்து லென்ஸ் பொருத்தப்பட்டுள்ளது. **மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்தபொழுது கண்கள் மிக மோசமான நிலையில் இருக்கிறது. சர்க்கரை, இரத்த அழுத்தம் அதிகமாக உள்ளது, எங்களால் சிகிச்சை ஒன்றும் செய்ய முடியாது என்று கைவிட்டு விட்டனர்.** உடனடியாக சகோதரருக்கு எனது நிலையை கூறினேன். அவர்கள் நான் ஜெபிக்கிறேன். நான்கு நாட்களில் உங்களிடம் திரும்ப பேசுகிறேன் என்று சொன்னார்கள்.

நான் வீட்டில் ஓய்வில் இருந்தேன். ஐந்தாவது நாள் சகோதரர் என்னை தொலைப்பேசியில் தொடர்பு கொண்டார்கள். சகோதரரே, **கலங்காதீர்கள் கர்த்தர் உங்களுக்கு பூரண சுகத்தை தருவார் என்று கூறினார்கள். அவர்கள் சொல்லி இரண்டு, மூன்று நாட்களிலேயே 25 சதவிகிதம் கண் பார்வை உண்டானது. அதன்பிறகு 60 சதவிகிதம் என்ற அளவிற்கு பார்வை தெரிய ஆரம்பித்தது. இப்பொழுது ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி கூட்டத்திற்கு வரும் பொழுது நூறு சதவிகிதம் தெளிவான கண் பார்வை எனக்கு வந்துவிட்டது.** கூட்ட முடிவில் சகோதரர் அவர்களிடம் எனக்கு முழுமையாக கண் பார்வை கிடைத்தது என்று சொன்ன பொழுது, அவர்கள் **"கர்த்தர் என்னிடம் சொன்ன பதிலைத்தான் நான் தொலைப்பேசியில் தெரிவித்தேன்"** என்று கூறினார்கள். **எனக்கு முழுமையான கண் பார்வையைத் தந்த தேவனை துதிக்கிறேன்.** சகோதரரும் அவர்கள் குடும்பத்தாரும் எங்கள் பகுதிக்கு கூட்டங்களை நடத்த வரும்பொழுது எல்லாம் எங்களால் முடிந்த உதவிகளை செய்து வருகிறோம்.

**திரு.ஸ்தனிஷ்லாஸ், நாகர்கோவில்.**

**பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். 1யோவான் 3:8**

குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினர்



நற்செய்தி பெருவிழாவில் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினர்



- **அன்பு தேவ பிள்ளைகளே, அன்பரின் ஊழியத்தின் மூலம் நடைபெறுகிற அனைத்து கூட்டங்களிலும் ஏராளமான மக்கள் பிசாசின் கட்டுகளிலிருந்தும், நோயின் அகோர பிடியிலிருந்தும் விடுதலை யாகி வருகின்றனர்.**

- **அப்போஸ்தலர்கள் காலத்தில் நடைபெற்ற அனைத்து அற்புதங்களையும் கர்த்தர் தாமே இன்றும் செய்து வருகின்றார்.**

- **உங்கள் குடும்பத்தின் சார்பாக இந்த கூட்டங்களை நடத்துவதற்கு நீங்கள் உதவி செய்யுங்கள். சகோதரர் ஸ்தனிஷ்லாஸ் –ஐபோல பலர் விடுதலை அடைந்து சாட்சியாக வாழ்வார்கள்.**

**இதுவரை நீங்கள் அன்பரின் ஊழிய பங்காளராக இல்லையென்றால் கீழ்க்கண்ட வாட்ஸ்அப் எண்ணிற்கு உடனே தொடர்புக் கொண்டு பங்காளராவதற்கான தகவல்களை அறிந்துக் கொள்ளுங்கள்.**

## Whatsapp No. - 95004 87061

மேலும் அன்பரின் ஊழியத்தைப் பற்றி விரிவாக அறிந்துக்கொள்ள எமது வெப்சைட் பக்கத்தை அனுகவும்
**www.ministryofjesus.in**

# Praise Report
# துதி அறிக்கை

### ஏழை தாயின் மகளுக்கு இரங்கிய கர்த்தர்!

என் மகள் பெயர் தேவதர்ஷினி. மருத்துவபடிப்பிற்கான நீட் தேர்வில் முதல் முறை வெற்றி பெறவில்லை. **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் ஏழைப்பிள்ளைகளுக்கு உதவி செய்வதற்காக செல்லிப்பாளையம் வந்திருந்தார்கள். அப்பொழுது என் மகள் இரண்டாம் முறை நீட் தேர்வை எழுதுவதற்காக ஆயத்தம் ஆகிக் கொண்டிருந்தாள். அந்த நேரத்தில் சகோதரர் என் மகளுக்காக ஜெபித்தார்கள். **கர்த்தர் அவர்களின் ஜெபத்தைக் கேட்டு என் மகள் நீட் தேர்வில் வெற்றி பெறவும், திருநெல்வேலி அரசு மருத்துவகல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கான இடம் கிடைக்கவும் கர்த்தர் உதவிசெய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். மகளுக்காக பாரத்துடன் ஜெபித்த சகோதரர் அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறோம்.**



**- சகோதரி சுந்தரி, செல்லிப்பாளையம்.**

### நாவின் கட்டுகளை நீக்கி பேசும்படி அருள்செய்த அற்புதர்!



என் மகன் பெயர் ஹில்டன். அவனுக்கு ஐந்து வயது வரைக்கும் பேச்சு வராமல் இருந்தது. இதனால் நாங்கள் மிகவும் கவலையடைந்தோம். அப்பொழுது திருநெல்வேலி நூற்றாண்டு மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் வருவது அறிந்து நாங்கள் மகனை அழைத்துக்கொண்டு கூட்டத்திற்கு வந்திருந்தோம். தனி ஜெபத்தில் என் மகனுடைய நிலையை சகோதரரிடம் கூறினேன். **அவர்கள் கவலைப்படாதே மகளே, என்று சொல்லிக்கொண்டே, என் மகனுடைய காதில் "இயேசு இயேசு இயேசு" என மூன்று முறை கூறினார்கள். "உன்னைவிட அதிகமாக பேசுவான்" எனச் சொல்லி அனுப்பினார்கள். ஒரு சில நாட்களிலேயே மகன் நல்லமுறையில் பேச ஆரம்பித்தான். இப்பொழுது அவனுக்கு 16 வயதாகிறது. இதுவரையும் கர்த்தர் அவனை நல்ல சுகத்துடன் பாதுகாத்து வருகின்றார். கர்த்தர் தாமே சகோதரர் மூலமாக இந்த பெரிய அதிசயத்தை செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.**

**- திருமதி. ஏஞ்சல், திருநெல்வேலி.**




## சிறுநீரகக் கல் வெளியேறிய அதிசயம்!

நான் கர்நாடகா மாநிலம் ஹுப்ளியில் வசிக்கின்றேன். எனது சிறுநீரகத்தில் ஏற்பட்ட வேதனையால் மிகவும் வலியால் துடித்தேன், மிகவும் அழுதேன். எத்தனையோ வலி நிவாரண மாத்திரைகள் எடுத்தும்



பிரயோஜனமும் இல்லை. அந்த நேரத்தில் ஒரு சகோதரி மூலம் அன்பரின் ஊழிய ஜெப மையத்தைத் தொடர்பு கொண்டு எனது வேதனை நீங்க ஜெபிக்கக் கேட்டேன். அவர்கள் மிகவும் பாரத்துடன் ஜெபித்து விட்டு **"சிறிது தண்ணீரையும், எண்ணெயும் எடுத்து ஜெபித்து ஒரு சொட்டு குடியுங்கள்"** என்று கூறினார்கள். அதன்படி செய்துவிட்டு இரவு படுக்கைக்குச் சென்றேன். காலையில் நான் சிறுநீர் கழிக்கும் பொழுது **6.3mm** அளவுள்ள மிகப் பெரிய கல் தானாகவே வந்து கீழே விழுந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! நெடுநாள் வலி, வேதனையிலிருந்து அற்புதமாக விடுவிக்கப்பட்டேன்.



- Sis. ஷாலினி, ஹுப்ளி.

---

## தீயபழக்கத்திலிருந்து விடுதலை! அறுவை சிகிச்சையின்றி அற்புத சுகம்!

எனது மகன் கஞ்சா போதை பழக்கத்திற்கு அடிமையாகி இருந்தான். அவன் நிமித்தம் கடந்த ஒன்றரை வருடமாக மிகுந்த கண்ணீர் வடித்தேன். என் மகனை நினைத்து நிம்மதியே இல்லாமல் இருந்தோம். இது குறித்து கடிதம் மூலம் அன்பரின் ஊழியத்திற்கு தெரியப் படுத்தினேன். பதில் கடிதத்தில் **"மகனுக்காக ஜெபிப்பதாகவும், எங்களையும் உபவாசம் இருந்து ஜெபிக்கும்படியும் ஆலோசனை கூறினார்கள்"** அதனால் நானும் என் கணவரும் சேர்ந்து உபவாசம் இருந்து ஜெபித்தோம். கர்த்தர் சகோதரரின் ஜெபத்தையும், எங்கள் ஜெபத்தையும் கேட்டு **என் மகன் மனமாற்றம் அடைந்து கஞ்சாபழக்கத்திலிருந்து விடுதலை அடையும்படி அற்புதம் செய்தார்.**

எனக்கு உடல்நிலை சரியில்லாமல் மருத்துவரிடம் சென்றேன். **அவர் உணவு குழாயில் பிரச்சனை உள்ளது. உடனே மூன்று நாட்களுக்குள் அறுவை சிகிச்சைசெய்யவேண்டும் என்று கூறினார்.** நான் உடனே அன்பரின் ஊழியத்திற்கு கடிதம் எழுதினேன். பதில் கடிதத்தில் **"உங்கள் சரீரத்தில் கத்தியே படாமல் கர்த்தர் சுகம் கொடுப்பார்"** என எழுதப்பட்டிருந்தது. அதின்படி சுமார் இரண்டு ஆண்டுகளாக அறுவை சிகிச்சை செய்யப்படவில்லை. கர்த்தர் அற்புத சுகத்தை கொடுத்து என்னை வழி நடத்துகிறார். அற்புதம் செய்த தேவனை துதிக்கின்றோம்.

- திருமதி. அம்முபாபு, திருத்தணி

---

**சென்னையில்**

## பங்காளர்கள் சந்திப்பு

**நாள் : டிசம்பர் 27 (செவ்வாய்க்கிழமை)**
**நேரம் : காலை 9 மணி முதல் 2.00 மணி வரை**
**மாலை 4.30 மணி முதல் 9 மணி வரை**
**இடம் : YMCA வெப்பேரி, ரித்தர்டன் ரோடு, சென்னை.**

ஆலோசனை & ஜெபம்
**Dr. ஆனந்த ஸ்திரா**

**பொருத்தனையை நிறைவேற்றி அற்புதத்தை பெற்றுக் கொண்டேன்**



எங்கள் வீட்டில் நல்ல கண்டிஷனில் உள்ள பொருள்கள் **TV, Fridge, Fan,** மோட்டார் சைக்கிள் எல்லாம் திடீர் திடீரென்று மாறி மாறி பழுதடைந்து கொண்டே இருந்தது. ஏன் இப்படி நடக்கிறது என்று தெரியாமல் மிகவும் கலங்கினேன். இப்படியாக அடிக்கடி நடந்து கொண்டிருந்தது.

**இந்நிலையில் ஒருமுறை நான் அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை தருவதாக பொருத்தனை செய்தேன். ஆனால் அதை நிறைவேற்றாமல் கால தாமதம் செய்துக் கொண்டிருந்தேன். அதை தேவன் தாமே எனக்கு நினைப்பூட்டினார். உடனே எப்படியாவது பொருத்தனையை நிறைவேற்ற வேண்டும் என முடிவு செய்து, உடனடியாக அந்த பொருத்தனை பணத்தை தனியாக எடுத்து வைத்தேன். அதன் பிறகு எனது வீட்டில் உள்ள எந்த பொருள்களும் ரிப்பேர் ஆகாமல் தேவன் பாதுகாத்தார்.** இந்த அற்புதத்தை செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

---

**17 லட்சம் கடன் பிரச்சனை தீர வழி வாசல் திறந்த தேவன்!**

திருநெல்வேலி கூட்டத்திற்கு நாங்கள் குடும்பமாக வந்திருந்து, என் மகனுக்கு வேலை கிடைக்கவேண்டுமெனவும், எனக்குள்ள முதுகு வலிகுணமாக வேண்டியும், 17 லட்சும் ரூபாய் கடன் பிரச்சனை நீங்க வேண்டியும் ஜெப விண்ணப்பத்தில் எழுதிக் கொடுத்திருந்தோம். **Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் ஜெபத்தினால் என் மகனுக்கு வெளிநாட்டில் நல்ல ஒரு கம்பெனியில் வேலை கிடைத்தது. எனக்கிருந்த முதுகு வலியும் அற்புதமாக சுகமானது. எல்லாவற்றுக்கும் மேலாக கடன் பிரச்சனை தீர கர்த்தர் வழி வாசலை திறந்தார்.** தேவ கிருபையால் இப்பொழுது மனநிம்மதியாக இருக்கின்றோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

- Mrs. லில்லி புஷ்பம், திருநெல்வேலி


**விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை**

**ஞாயிறு தோறும்**

**காலை 9.30 மணி – 11.30 மணி**

- ✓ அபிஷேகம் நிறைந்த பாடல்கள்
- ✓ அனல்மூட்டும் தேவ செய்தி
- ✓ உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்



ஜாதி, மத, இன வேறுபாடின்றி
அனைவரும் குடும்பமாக இவ்வாராதனையில்
பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம்.

Live @ My Deliverance Church

டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்
10–வது குறுக்குத் தெரு, மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி–18.



# S J SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

★ சிறுமையும் எளிமையுமானவர் தண்ணீரைத் தேடி, அது கிடையாமல், அவர்கள் நாவு தாகத்தால் வறளும்போது, கர்த்தராகிய நான் அவர்களுக்குச் செவி கொடுத்து, இஸ்ரவேலின் தேவனாகிய நான் அவர்களைக் கைவிடாதிருப்பேன். – ஏசாயா 41:17

★ நீர் செலுத்தும் காணிக்கைகளையெல்லாம் அவர் நினைத்து, உமது சர்வாங்க தகனபலியைப் பிரியமாய் ஏற்றுக்கொள்வாராக.

★ அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி, உமது ஆலோசனைகளை யெல்லாம் நிறைவேற்றுவாராக. – சங்கீதம் 20:3–4

அன்பான தேவ பிள்ளைகளே!

கர்த்தருடைய பெரிதான கிருபையினாலும், உங்கள் உதவியினாலும் நம்முடைய **S J Saves Trust** மூலம் கடந்த 25 ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு நாம் உதவி செய்கிறோம்.

இவர்களில் 14 வயதுக்கும் குறைவான பிள்ளைகள் 60 சதவிகிதம் பேர் இருக்கின்றனர். இதில் நான்கு வயது நிரம்பிய சிறுவர், சிறுமியரும் நம்முடைய **Care Center**-க்கு வருகிறார்கள். இவர்களுக்கு பகுதிநேர ஆசிரியர்களைக் கொண்டு நல்லொழுக்கங்களை கற்றுக் கொடுக்கிறோம். படிக்க வசதி இல்லாத பிள்ளைகளுக்கு உதவி செய்கிறோம்.

கொடிய நோயினால் பாதிக்கப்பட்டு இறந்துப் போனவர்களின் பிள்ளைகள் மற்றும் எந்தவித அடிப்படை வசதியும் இல்லாத பிள்ளைகளுக்கு நாம் இத்தகைய உதவிகளை செய்து வருகிறோம். ஒரு சில பிள்ளைகள் பூ பறிக்கும் வேலைக்கு சென்று நோயினால் பாதிக்கப்பட்ட பெற்றோர்களுக்கு உதவியாக இருக்கிறார்கள். அந்த பிள்ளைகளுக்கு மாலை நேர வகுப்புகள் நடத்தி, இரவு உணவு கொடுத்து வருகிறோம்.

## S J Saves Trust மூலம் செய்யப்பட்ட உதவிகள்

கடந்த மாதம் ஆத்தூரில் உள்ள 60 சிறு பிள்ளைகளுக்கும், 70 ஏழ்மையான விதவைகளுக்கும் மழை காலத்திற்கு தேவையான போர்வை, பாய் மற்றும் நல்ல உணவும், மருந்துவகைகளும் கொடுக்கப்பட்டது.

அத்துடன் பிள்ளைகளின் படிப்பிற்கு தேவையான நோட்புக், பென்சில், பேனா மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்கள் கொடுக்கப்பட்டது.

சேலம் மாவட்டம் ஏரிக்கரையில் உள்ள 70 சிறுபிள்ளைகளுக்கும், 30 ஏழை விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் உதவிகள் வழங்கப்பட்டது.

## கிறிஸ்துமஸ் பண்டிகைக்கான உதவிகள்

நம்மிடத்தில் கல்வி கற்கும் ஏழை, எளிய பிள்ளைகளுக்கும், ஏழை விதவைப்பெண்கள் மற்றும் ஆதரவற்ற வயோதிபர்களுக்கும் நாம் கிறிஸ்துமஸ் புத்தாடையும், கேக் மற்றும் சிறப்பு விருந்தும் வழங்க வேண்டும். இதற்காக ஜெபியுங்கள்.

**ஒரு நபருக்கு ஆகும் செலவு Rs.1,500/- உங்களால் இயன்ற உதவியை செய்யுங்கள். கர்த்தர் தாமே உங்களை இந்த கிறிஸ்துமஸ் நாளில் மிகவும் ஆசீர்வதிப்பாராக!**

# கிறிஸ்துமஸ் நன்னாளில் ஓர் ஏழையின் முகத்தில் சிரிப்பைக் காண உதவுவோம்!

ஒவ்வொரு வருடமும் கிறிஸ்துமஸ் பண்டிகை காலங்களில் நம் **S.J.Saves Trust-ல்** உள்ள ஏழைப் பிள்ளைகள், ஏழை விதவைகள் மற்றும் ஆதரவற்ற வயோதிபர்களுக்கு புத்தாடைகள், இனிப்புகள், பரிசுப்பொருள்கள் மற்றும் பிரியாணி கொடுத்து அவர்களை மகிழ்வித்து வருகிறோம். இந்த ஆண்டும் இத்தகைய நற்பணிகளுக்கு நீங்கள் உதவி செய்யும்படி அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

**500 ஏழை, எளிய பிள்ளைகளுக்கும், 500 ஏழை விதவைப்பெண்களுக்கும், ஆதரற்ற வயோதிபர்களுக்கும் புத்தாடைகள் வாங்கிக் கொடுக்க உதவி செய்யுங்கள்.**



**ஒரு நபருக்கு கிறிஸ்துமஸ் அன்பளிப்பு = Rs.1500/-**

**1000 x 1500 = Rs. 15,00,000/-**

**அந்நாட்களில் விருந்துண்டு சந்தோஷங்கொண்டாடவும், ஒருவருக்கொருவர் வரிசைகளை அனுப்பவும், எளியவர்களுக்குத் தானதர்மஞ்செய்யவும் வேண்டுமென்று திட்டம்பண்ணினான். எஸ்தர் 9:22**

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act-ன்படி Sec. 80G Exemption உண்டு**

ஆத்தூர் மற்றும் ஏரிக்கரையில் உள்ள 130 சிறுபிள்ளைகளுக்கும், 70 ஏழ்மையான விதவைகளுக்கும் மழை காலத்திற்கு தேவையான போர்வை, பாய், நல்ல உணவும், மருந்துவகைகளும் மற்றும் பிள்ளைகளின் படிப்பிற்கு தேவையான நோட்புக், பென்சில், பேனா மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்கள் கொடுக்கப்பட்டது.














# S.J.S.T கிராமப்புற மருத்துவமனை பணிகள்

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் **S.J.S.T.** மருத்துவமனைக்கு உதவுகின்ற ஒவ்வொரு பங்காளர்களையும் கர்த்தர் ஆசீர்வதிப்பார். சுமார் 25 பங்காளர்களின் தாராளமான உதவியால் **ULTRA SOUND SCAN** வாங்கிவிட்டோம். இதன் மூலம் அநேக ஏழை நோயாளிகள் நன்மையடைகிறார்கள்.

- **இதய அடைப்பு நோயாளிகளை காப்பாற்றுவதற்குரிய முக்கிய கருவியான வென்டிலேட்டர்-ஐ வாங்குவதற்கு, தூத்துக்குடி ராஜா ஏஜென்ஸி உரிமையாளர் திரு. ராஜா அவர்களும், அவருடைய தம்பி தேவராஜ் அவர்களும் ஸ்பான்ஸர் செய்துள்ளார்கள். கர்த்தர் தாமே அவர்களது நிறுவனத்தை மேன்மேலும் ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம். அவர்களுக்கு நல்ல சுகத்தையும், தீர்க்காயுசையும் கர்த்தர் தாமே தருவாராக.**
- **அடுத்த கட்டபணியாக அவசரமாக ஆப்ரேஷன் தியேட்டர் கட்டவேண்டியுள்ளது. இந்த காரியத்திற்காக ஜெபியுங்கள். அதன் முதல் கட்டமாக 20அடி அகலம் 120 அடிநீளம் உள்ள நான்கு மாடி கட்டிடம் நமக்கு தேவை. 20 x 120 உள்ள ஒரு பிளாக் மற்றும் 20 x 120 உள்ள மற்றொரு பிளாக் கட்டவேண்டும்.**

நம்மைப் போல பிறனையும் நேசிப்போமாக. நல்ல சமாரியனை போல மாறுவோமாக. அருள்நாதர் இயேசு நமக்கு இரங்கினதுபோல நாமும் பிறருக்கு இரங்குவோம். இயேசு கிறிஸ்துவினுடைய வாழ்க்கை முழுவதும் பலவித நோயாளிகளை சுகப்படுத்தியதையே தம் ஊழியத்தில் செய்தார். அவரைப்போல நாமும் எளிமையான நோயாளிகளுக்கு உதவி செய்வோம். கர்த்தர் தாமே காரியத்தை வாய்க்கப்பண்ண ஜெபியுங்கள்.

**ஒரு சதுர அடி மருத்துவமனை உபகரணங்களோடு**
**கட்ட ஆகும் செலவு Rs.6,000/-**
**உங்கள் குடும்பத்தின் சார்பாக, உங்கள் நிறுவனத்தின்**
**சார்பாக நீங்களும் தாங்குங்கள்.**

**பரலோகத்தின் தேவனானவர் எங்களுக்குக் காரியத்தை கைகூடி வரப்பண்ணுவார்**
**அவருடைய ஊழியக்காரராகிய நாங்கள் எழுந்து கட்டுவோம் - நெகேமியா 2: 20**



WORLD NEWS

# உலகச் செய்திகள்

## மேற்கு ஆசியாவின் மிகப்பெரிய நதியான ஐபிராத்து நதி ஆச்சரிய விதமாக வற்றிப்போனது!






- ஐபிராத்து நதி ஆங்கிலத்தில் **Euphrates** என்று அழைக்கப்படுகிறது.
- இந்த நதியானது ஈராக், சிரியா, துருக்கி நாடுகளின் வழியாக ஓடும் நதியாகும்.
- 1970ஆம் ஆண்டு சிரியாவும், துருக்கியும் இந்த நதியை தங்களுக்கென இரண்டாக பிரித்துக் கொண்டது.
- இந்த நதியின் அகலம் சில இடங்களில் 8 முதல் 10 கி.மீ. ஆகவும், நீளம் 1430 கி.மீ. ஆகவும் உள்ளது. இதன் மொத்த நீளம் 143 கியூபிக் கி.மீ. ஆகும். 117 மில்லியன் அதாவது 11.7 கோடி சதுரடி நிலப்பரப்பாகும். இதன் அளவு கிட்டத்தட்ட உப்பு கடலுக்கு சமமாக இருக்கும்.
- இந்த நதியின் அருகில் உள்ள கல்வெட்டுகளில், பல நாட்டைச் சேர்ந்த சர்வாதிகாரிகளின் சரித்திரங்களும், பேரரசுகளின் சரித்திரங்களும் காணப்படுகின்றன.
- இந்த நதியில் பொன் காணப்படும் என்று இஸ்லாமியர்கள் நம்புகிறார்கள்.
- தற்பொழுது இந்த நதியில் அநேக ஆதி கிறிஸ்தவர்களுடைய கல்லறைகள் இருக்கிறது என்று கண்டுபிடித்துள்ளார்கள்.
- பழங்காலத்து மனிதர்களுடைய எலும்புகள், நாணயங்கள், தங்க நகைகள், மண், இரும்பு பாண்டங்கள் இந்த நதியில் காணப்படுகின்றன.
- முதல் ஐபிராத்து நதி எர்மோன் மலையில் உருவாகினது. இரண்டாவது ஐபிராத்து நதி துருக்கியில் உருவானது. இந்த நதிக்கும் ஏதேன் ஐபிராத்து நதிக்கும் சம்மந்தம் இல்லை.
- இஸ்ரேல் ஜனங்களுக்கு வடக்கு எல்லைகுறியாக ஆக்கப்பட்ட இடம் தான் வட கிழக்கு ஐபிராத்து.
- ஐபிராத்து நதியில் சீரிய தேசத்து இராஜாக்கள் ஆண்ட காலத்தில் மிகப்பெரிய கல்லறை குழிகள் காணப்பட்டன. இந்த நதியை ஒட்டி பலதரப்பட்ட நாடுகளின் நவநாகரீகங்கள் பெருகின.
- இந்த நதியிலுள்ள மீன்கள் மற்றும் இதன் உப்பு இல்லாத தன்மைகள் இதை ஒட்டியுள்ள பல தேசங்களை மிகுந்த வளத்துடன் காப்பாற்றி வந்தது.
- பல நூற்றாண்டுகளாக சொல்ல வேண்டும் என்றால் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்டுகளாக இந்த நதி செழிப்பாக ஓடிக்கொண்டிருந்தது.
- தற்பொழுது இந்த நதி வற்ற ஆரம்பித்துவிட்டது. இதற்கு காரணம் அங்கு காணப்பட்ட (மத்திய கிழக்கு நாடுகள்) அதிகமான வெப்பம் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். விநாடிக்கு 200 கியூபிக் மீட்டர் அளவு தண்ணீர் குறைந்து கொண்டே செல்கிறது. உலகிலேயே மிக சீக்கிரமாக வற்றிப்போன நதி இதுதான்.
- இந்த நதி செல்கின்ற பல இடங்களில் ஒரு சொட்டு தண்ணீர் கூட இல்லாமல் வற்றிப்போயிற்று. 2040-ம் ஆண்டுகளுக்குள் நதியில் எங்குமே தண்ணீர் இருக்காது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

**பங்காளர் சந்திப்பு**

**இராஜமன்றியில்**

**டிசம்பர் 3**
சனிக்கிழமை

Place : Hotel Shelton,
Near RTC Complex,
Rajamundry.



**அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்**

**குண்டூரில்**

**டிசம்பர் 4**
ஞாயிற்றுக்கிழமை

Place : Ground Floor,
Thanvika Function Hall,
ALA Hospital Backside,
Bharathpet 6th Line
Guntur.

**தேவ செய்தி**

**Dr. ஆனந்த ஸ்திரா**

**நேரம் : மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை**

**தொடர்புக்கு : 91770 87860 & 99445 36343**

## செகந்திராபாத்தில் அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்

**டிசம்பர் 10**
சனிக்கிழமை

இடம் : YMCA ஹால்,
SP ரோடு, யசோதா மருத்துவமனை எதிரில்,
மணிக்கூண்டு அருகில், செகந்திராபாத்.

**நேரம் : காலை 9.00 மணி முதல் 3.00 மணி வரை**



**தேவ செய்தி**

**Dr. ஆனந்த ஸ்திரா**
**Mrs. மார்கிரேட் ஸ்திரா**

**தொடர்புக்கு : 91770 87860 & 99445 36343**

dranandastira@mojindia.org, margret@mojindia.org,
joshua@mojindia.org, jane@mojindia.org,
info@mojindia.org

**Telugu Whats App No: 91770 87860**


தஞ்சாவூரில்
டிசம்பர் 17
சனிக்கிழமை
நேரம்
மாலை 4.00 மணி முதல்
8.00 மணி வரை
அற்புதத்தின் மாலை
இடம்: சுந்தர் மஹால்
காவேரி நகர், புதுக்கோட்டை ரோடு, தஞ்சாவூர் 5
தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா
Mrs. மார்கிரேட் ஸ்திரா
தொடர்புக்கு : 94888 45627


நாகர்கோவிலில்
புத்தாண்டு சிறப்பு ஆசீர்வாதக் கூட்டம்
ஜனவரி 14
சனிக்கிழமை
(அரசு விடுமுறை)
இடம் : விஜயதா திருமண மண்டபம்
W.C.C. ரோடு, நாகர்கோவில்
நேரம் : காலை 9.30 மணி முதல் 2.00 மணி வரை
தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா
Mrs. மார்கிரேட் ஸ்திரா
தொடர்புக்கு : 94488 45627 & 82203 17472


வேதாகமப் பெண்கள்
விசேஷித்த தொடரைக் காணத்தவறாதீர்கள்
ஒவ்வொரு
வெள்ளியும்
மாலை 7
மணிக்கு
Dr.ஜேன் ஜாஷ்வா YOUTUBE சேனலில் கண்டு மகிழுங்கள்

# உங்கள் ஆசீர்வாதத்தின் நாள்

**ஈரோட்டில்**

ஜனவரி 7
சனிக்கிழமை

இடம் : CSI பாரிஸ் ஹால்,
டெலிபோன் பவன் அருகில், பிரப்ரோடு,
ஈரோடு.

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை





தேவ செய்தி & ஜெபம்

**Rev.Dr. A. ஜாஷ்வா**
**Dr. ஜேன் ஜாஷ்வா**

**திருநெல்வேலியில்**

ஜனவரி 14
சனிக்கிழமை

இடம் : செல்வி மஹால்,
காளிமார்க் பேருந்து நிறுத்தம் அருகில்,
முருகன் குறிச்சி, பாளையங்கோட்டை
திருநெல்வேலி.

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

**சென்னையில்**

ஜனவரி 16
திங்கட்கிழமை

இடம் : J.J. மஹால்
L.K.S. தங்க மாளிகை எதிரில், G.S.T. மெயின்ரோடு,
கடப்பேரி, மேற்கு தாம்பரம், சென்னை.

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

**வேலூரில்**

ஜனவரி 17
செவ்வாய்க்கிழமை

இடம் : C.S.I பெத்தேல் ஜூபிலி ஜெப அரங்கு,
சாய்நாதபுரம், வேலூர்.

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை



## தேவ செய்தி & ஜெபம்

## Rev. Dr. A. ஜாஷ்வா

தொடர்புக்கு : 94888 45627, 80987 42638